நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பட்டுக்கோட்டை.
முன்னிலை – திரு. த.சுதர்சன்.,எம்.ஏ., எல்.எல்.பி.,
நீதித்துறை நடுவர், பட்டுக்கோட்டை.
2026 ஆம் ஆண்டு ஜீன் திங்கள் 27 ம் நாள் வெள்ளிக்கிழமை
ஆண்டு பட்டிகை வழக்கு எண்.18/2023
CNR. No.TNTJ11-000196-2023

அரசு சார்பாக காவல் உதவி ஆய்வாளர்,
அதிராம்பட்டிணம் காவல் நிலையம்,
குற்ற எண்.152/2017 .... குற்றமுறையிடுபவர்

/எதிர்/

சைபுதீன் (வயது–44/2026),
த/பெ. சேக்தாவூத்,
19/101, மேலத்தெரு,
அதிராம்பட்டிணம்,
பட்டுக்கோட்டை தாலுக்கா,
தஞ்சாவூர் மாவட்டம்.

.... எதிரி

**<u>வழக்கு சுருக்கம்</u>**

| வ.எண் | விவரங்கள் | விளக்கம் |
|---|---|---|
| 1) | வழக்கு எண் | 18/2023 |
| 2) | காவல் நிலையம் மற்றும் குற்ற எண் | அதிராம்பட்டிணம் காவல் நிலையம்,<br>குற்ற எண்.152/2017 |
| 3) | எதிரியின் பெயர், தந்தை பெயர் மற்றும் வயது, தொழில், முகவரி, | சைபுதீன் (வயது–44/2026),<br>த/பெ. சேக்தாவூத்,<br>19/101, மேலத்தெரு,<br>அதிராம்பட்டிணம்,<br>பட்டுக்கோட்டை தாலுக்கா,<br>தஞ்சாவூர் மாவட்டம். |
| 4) | சம்பவம் நடைபெற்ற நாள் | 16.06.2017 |
| 5) | புகார் அளித்த நாள் | 17.06.2017 |
| 6) | கைது செய்த நாள் | 28.06.2017 |
| 7) | பிணையில் விடுவிக்கப்பட்ட | 30.06.2017 |

| | | |
|---|---|---|
| | நாள் | |
| 8) | அமர்வு நீதிமன்றத்திற்கு மேல் விசாரணைக்கு அனுப்பிய தேதி | – |
| 9) | விசாரணை தொடங்கிய தேதி | 06.05.2024 |
| 10) | விசாரணை முடிவுற்ற தேதி | 01.06.2026 |
| 11) | தீர்ப்பு அல்லது உத்தரவு | இறுதியாக, மேலே விவாதித்த வகையில் எதிரிக்கு எதிராக இதச பிரிவு 294(b), 324, 506 (2) வின் கீழான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு இடமின்றி அரசு தரப்பில் நிரூபிக்கபடவில்லை என்று தீர்மானித்து சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரிக்கு எதிரான இதச பிரிவுகள் 294(b), 324, 506 (2) இதச கீழ் குற்றவாளி இல்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து கு.வி.மு.ச பிரிவு 248(1) ன் கீழ் எதிரியை விடுதலை செய்து உத்தரவிடுகிறது. |
| 12) | தீர்ப்பின் நகல் எதிரிக்கு வழங்குதல் | ஆம் |
| 13) | காலதமதத்திற்கான காரணம் | குற்றப்பத்திரிக்கை 20.02.2023–ம் தேதி அன்றுதாக்கல் செய்யப்பட்டுள்ளது. 20.02.2023 ம் தேதி அன்று இந்நீதிமன்றத்தால் வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டது. இவ்வழக்கீன் தீர்ப்புரை 27.06.2026–ம் தேதி அன்று திறந்த நீதிமன்றத்தில் பகரப்பட்டது. காலதாமதம் ஏற்படவில்லை. |

இவ்வழக்கானது இந்நீதிமன்றத்தில் 20.02.2023ம் தேதியன்று கோப்புக்கு எடுக்கப்பட்டு நிலுவையில் இருந்து வந்த நிலையில் இன்றையதினம் என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்த போது, குற்றமுறையிடுபவர் தரப்பில் திரு.M.ரூபேஷ்., B.A., L.L.B.,(Hons) அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை 2 அவர்களும், எதிரி தரப்பில் திரு.அலெக்ஸ்., பி.எஸ்.சி., எல்.எல்.பி., அவர்கள் முன்னிலையாகியும் வழக்கு ஆவணங்கள், சாட்சியங்கள் அனைத்தும் பரிசீலனை செய்து இன்று வழங்கும்,

## தீர்ப்புரை

**1). அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்:–**

கடந்த 16.06.2017ந் தேதி காலை 09.30 மணிக்கு வாதியின் வீட்டினுள் வாதிக்கும் எதிரிக்கும் ஏற்பட்ட வாய் தகராறு காரமணாக வாதியை எதிரி குச்சிக்காரி தேவடியா மகனே என்று திட்டி இரும்பு பைப்பால் இடித்தும், காலால் உதைத்தும், சில்வர் சொம்பால் முகத்தில் குத்தி சிறுகாயத்தை ஏற்படுத்தியும், சாட்சிகளை கொலை செய்து விடுவேன் என்று கொலை மிரட்டல் விடுத்த குற்றத்திற்காக அதிராம்பட்டிணம் காவல் நிலைய காவல் ஆய்வாளரால் எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டது :–**

குற்ற இறுதி அறிக்கை மற்றும் இதர வழக்காவணங்களை பரிசீலனை செய்ததில் எதிரி மீது நடவடிக்கை எடுக்க முகாந்திரம் இருப்பதாக இந்நீதிமன்றம் கருதி வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டு எதிரிக்கு அழப்பாணை அனுப்பட்டுள்ளது. எதிரி அழைப்பாணையின் பேரில் இந்நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன் அவருக்கு வழக்கு அவணங்களின் சட்டப் பிரிவு 207 கு.வி.மு.ச வின் கீழ் இலவசமாக நகல் வழங்கப்பட்டது.

**3. குற்றச்சாட்டு வனைதல்**

எதிரிக்கு ஒரு சந்தர்ப்பம் அளிக்கப்பட்டு, இரு தரப்பும் கேட்கப்பட்டு தகுந்த ஆதாரங்கள் மற்றும் நம்புவதற்கு காரணங்கள் இருப்பதனால் எதிரி மீது இந்திய தண்டனை சட்டப் பிரிவுகள் 294(b),324,506(2) இதச வின் கீழ் குற்றச்சாட்டு வனைந்து, குற்றவியல் விசாரணை நடைமுறை சட்டம் பிரிவுகள் 240–ன் கீழ் எதிரிக்கு எடுத்துரைத்து வினவியபோது எதிரி பொய் வழக்கு என்றும், அவர் குற்றவாளி இல்லை என்றும், தெரிவித்தார். எனவே, வழக்கானது அரசு தரப்பு சாட்சிகளின் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

**4. அரசு தரப்பு சாட்சிகள்.**

அரசு தரப்பில் அ.சா.1 முதல். அ.சா.6 வரையிலான சாட்சிகள் விசாரிப்பட்டனர். அ.சா.ஆ.1 முதல். அ.சா.ஆ.6 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டன. அரசு தரப்பில் சான்று பொருள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

**<u>5.அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து தெரியவரும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் பின்வருமாறு</u>**

(5.1) அ.சா.1 தனது சாட்சியத்தில், கடந்த 24.3.2016 காலை 09.00 மணிக்கு தன் வீட்டில் இருந்தபோது தன் மகன் கதவை உதைத்தார். என் மகளும், மனைவியும் அவனை வெளியில் கதவை சாத்தி விட்டார்கள். நான் வெளியில் வந்து ஏன் கதையை உதைக்கிறாய் என்று கேட்டபோது என் மனைவி தூமையகுடிக்கு என்று அசிங்கமாக தன்னை திட்டியதாக என்னிடம் சொன்னார். நான் சமாதானம் செய்து அனுப்பி வைத்தேன். பிறகு என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது என்றும் புகார் வாக்குமூலத்திலுள்ள அ.சா.ஆ.1 தன்னுடையது என்று சாட்சியம் அளித்துள்ளார்.

(5.2) மேற்படி அ.சா.1 சாட்சியத்தை பரிசீலிக்கையில் நீதிமன்றத்தில் அளித்துள்ள சாட்சியத்தில் உள்ள தேதியும் அவர் கொடுத்த புகார் வாக்குமூலமான அ.சா.ஆ.1 மற்றும் அ.சா.ஆ 4 லிலுள்ள தேதிக்கும், அதில் உள்ள சங்கதிகளுக்கும் முரணாக உள்ளது என்பது தெரிய வருகிறது.

(5.3) அ.சா.2 சகாபுதீன் கண்ணுற்ற சாட்சியாக முன்னிடப்பட்டுள்ளார், எனக்கு வழக்கு சம்பந்தமாக எதுவும் தெரியாது என்று பிறழ் சாட்சியமாக மாறி சாட்சியம் அளித்துள்ளார்.

(5.4) அ.சா.3 சுதாகர் மருத்துவர் தனது சாட்சியத்தில், 16.06.2017காலை 10.00 மணி அளவில் பணியில் இருந்தபோது ஷேக் தாவூத் என்பவர் அடையாளம் தெரிந்த நபர் தன்னை இரும்பு பைப், குவளைக் கொண்டு முகம் மற்றும் மார்பில் தாக்கியதாக சிகிச்சைக் வந்தார். அவரை பரிசுத்தபோது மூக்கில் லேசாக இரத்தம் வந்தது. அவருக்கு சிகிச்சை அளித்து சாதாரண காயம் ஏற்பட்டது என்று விபத்து பதிவேட்டுடன் கூடிய காய சான்றிதழ் அ.சா.ஆ.2 வழங்கினேன் என்று சான்று அளித்துள்ளார்.

(5.5) மேற்படி மருத்துவர் சாட்சியத்தை பரிசீலிக்கையில், அ.சா.1 சிகிச்சைக்கு சென்றுள்ளார் என்பதும் அவருக்கு மூக்கில் லேசாக காயம் ஏற்பட்டுள்ளது என்பது தெரிய வருகிறது.

(5.6) அ.சா.5 திரு. விஜய் ஆனந்த்(SSI) தனது சாட்சியத்தில், வாதி சையூதின் என்பவரிடம் இருந்து புகாரை பெற்று முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 பதிவு செய்து சம்பவ இடம்

சென்று பார்வை மகசர் அ.சா.ஆ.5 மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.6 தயார் செய்து, வழக்கை மேல்விசாரணைக்காக உதவி ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன்.

(5.7) அ.சா.6 திரு.ஜார்ஜ் ராஜா(SI) ஓய்வு தனது சாட்சியத்தில், வழக்கை புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, மருத்துவரை விசாரித்து காயச்சான்றிதழ் பெற்று, புலன் விசாரணையை முடித்து குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

6. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியத்தில் குற்றம் சாட்டப்பட்டவருக்கு எதிரான அம்சங்களை தொகுத்து கு.வி.மு.ச.பிரிவு 313(1) (ஆ) வின் படி வினவிய போது குற்றம் சாட்டப்பவர் அவற்றை பொய் சாட்சியம் என மறுத்தார். குற்றம் சாட்டப்பட்டவர் தரப்பில் சாட்சிகள் முன்நிறுத்தப்படவில்லை.

**7.தீர்வு:–**

(7.1) மேற்படி சாட்சியங்களை கவனமுடன் பரிசீலிக்கையில் அ.சா.1 தனது சாட்சியத்தில் தன்னை எதிரி ஆபாசமாக பேசியதாகவோ, ஆயுதங்களால் அடித்ததாகவோ, தனக்கு கொலை மிரட்டல் விடுத்தும் எந்த இடத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை. தன் மனைவி அவரை திட்டியதற்காக கதவை உதைத்ததாக செல்லியுள்ளார். எனவே இவரது சாட்சியானது அரசு தரப்பு வழக்கிற்கு ஒத்துரைக்கவில்லை என்பது தெரிய வருகிறது. அவர் காவல் நிலையத்தில் கொடுத்த புகார் மனுவான அ.சா.ஆ 1 பரிசீலிக்கையில், எதிரி தன்னை வெளியே போடா என்று சொல்லி பைபால் அடித்து, சொம்பால் மூக்கில் குத்தியதாகும் அதனால் தனக்கு உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பதாகவும் புகார் கொடுத்துள்ளார் என்பது தெரிய வருகிறது. முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ 2 பரிசீலிக்கையில் புகார் வாக்கு மூலத்தில் உள்ளது போலவே உள்ளது. ஆனால் அ.சா.1 நீதிமன்றத்தில் அளித்த சாட்சியத்தில் அ.சா.ஆ.1 மற்றும் அ.சா.ஆ.2 ஆகியவற்றிக்கு முற்றிலும் முரணாக சாட்சியம் அளித்துள்ளார்.

(7.2) இவ்வழக்கில் கண்ணுற்று சாட்சியாக விசாரிக்கப்பட்ட அ.சா.2 எனக்கு வழக்கு சம்பந்தமாக ஏதும் தெரியாது என்று சாட்சியமளித்துள்ளார்.

(7.3) அ.சா.4 மகஜர் சாட்சி ஷேக் தாவூத் வாயில் ரத்தக்காயத்துடன் ரோட்டில் நின்றார் என்று குறிப்பிட்டுள்ளார்.

(7.4) அ.சா.3 மருத்துவரின் சாட்சியை பரிசளிக்கையில், அ.சா.1 மூக்கில் லேசாக ரத்தம் வந்ததாகவும், அவருக்கு வெளி காயம் எதுவும் இல்லை என்று சான்று அளித்துள்ளார். எனவே அ.சா.1 மூக்கில் லேஷனா காயம் ஏற்பட்டுள்ளது என்பது மட்டும் நிரூபணம் ஆகிறது. ஆனால் அந்த காயம் எதிரியால் ஏற்படுத்தப்பட்டது என்பதற்கு எந்தவிதமான சாட்சியமும் இல்லை. மேலும் அ.சா.3 தனது குறுக்கு விசாரணையில் "***மூக்கின் உள்பகுதி லேசாக இருக்கும் என்றாலும் அதனால் நகத்தால் கீறினால் கூட ரத்தம் வரும் என்றால் சரிதான்*** "என்று கூறியுள்ளார்.

(7.5) அதேபோல், இவ்வழக்கில் சான்று பொருள் ஏதும் அரசு தரப்பில் கைப்பற்றப்படவில்லை என்பதும் தெரிய வருகிறது. அ.சா.1 தன்னை எதிரி ஆபாசமாக பேசி அடித்து கொலை மிரட்டல் விடுத்ததாக எந்த இடத்திலும் குறிப்பிடும் சொல்லவில்லை. அதனால் அரசு தரப்பில் குற்றம் சாட்டப்படுவது போல் எதிரியால் தான் அ.சா.1 மூக்கில் லேசான காயத்தை ஏற்படுத்தப்பட்டது என்பதற்கு எந்த சாட்சியமும் இல்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து பின்வருமாறு தீர்ப்பு அளிக்கப்படுகிறது.

(7.6) பிரிவு 294(b) ன் கீழ் எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டினை இவ்வழக்கின் பொருண்மை மற்றும் சூழ்நிலைகளின் ஆராய்ந்து பார்க்கும் போது குற்றம் சாட்டப்பட்ட நபர் தேவடியா குச்சிக்காரி என்று பயன்படுத்தியதாக அ.சா.1 தனது நீதிமன்ற சாட்சியத்தில் சொல்லவில்லை. எனவே, குற்றம் சாட்டப்பட்ட நபர் இச்சட்டப்பிரிவு 294(b) ன் கீழ் எதிரி குற்றவாளி இல்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

(7.7) பிரிவு 324 இதச பிரிவின் கீழ் குற்றம் சாட்டப்பட்ட நபர் அ.சா.1 ஐ இரும்பு பைப்பு, குவளை கொண்டு தன்னை முகம், மார்பில் தாக்கியதாக அரசு தரப்பு வழக்காகும். ஆனால், அ.சா.1 தனது நீதிமன்ற சாட்சியத்தில் எதிரி தன்னை அடித்தாக எதுவும் சொல்லவில்லை. எனவே, சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து அவர் மேற்படி குற்றச்சாட்டை செய்யவில்லை என்றும், இந்நீதிமன்றம் முடிவு செய்து எதிரியின் மீது பிரிவு 324ன் கீழ் குற்றவாளி இல்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

(7.8) பிரிவு 506(2) கீழான குற்றச்சாட்டை இவ்வழக்கின் பொருண்மை மற்றும் சூழ்நிலைகளுடன் ஆராய்ந்து பார்க்கும் போது குற்றம் சாட்டப்பட்ட எதிரி கொலை மிரட்டல் விடுத்தாக அரசு தரப்பில் குற்றம் சாட்டப்பட்டுள்ளார். ஆனால், அ.சா.1 தனது நீதிமன்ற சாட்சியத்தில் தன்னை எதிரி கொலை மிரட்டல் விடுத்தாக சொல்லவில்லை. எனவே, குற்றம் சாட்டப்பட்ட நபர் இச்சட்டப்பிரிவு 506(2) ன் கீழ் எதிரி குற்றவாளி இல்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**<u>8) முடிவாக:</u>**

(8.1) இறுதியாக, மேலே விவாதித்த வகையில் எதிரிக்கு எதிராக இதச பிரிவு 294(b), 324, 506 (2) வின் கீழான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு இடமின்றி அரசு தரப்பில் நிரூபிக்கபடவில்லை என்று தீர்மானித்து சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரிக்கு எதிரான இதச பிரிவுகள் 294(b), 324, 506 (2) இதச கீழ் குற்றவாளி இல்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து கு.வி.மு.ச பிரிவு 248(1) ன் கீழ் எதிரியை விடுதலை செய்து உத்தரவிடுகிறது.

9) இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்பதால் அதுகுறித்த உத்தரவு ஏதுமில்லை.

10) இவ்வழக்கில் எதிரி எழுதிக் கொடுத்த பிணை பத்திரம் மேல் முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்தாக வேண்டும் என்றும் உத்தரவிடப்படுகிறது.

/இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2026 ஆம் ஆண்டு ஜீன் திங்கள் 27 ஆம் தேதி வெள்ளிக்கிழமை ஆகிய இன்று என்னால் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது./

SUDHARSAN T

Digitally signed by SUDHARSAN T
Date: 2026.06.27 16:45:03 +0530

நீதித்துறை நடுவர்,
பட்டுக்கோட்டை.

**<u>அரசு தரப்பு சாட்சிகள்</u>**

| | |
|---|---|
| அ.சா.1 | திரு. ஷேக்தாவூத் |
| அ.சா.2 | திரு. சகாபூதின் |

| | |
|---|---|
| அ.சா.3 | திரு. சுதாகர் (மருத்துவர்) |
| அ.சா.4 | திரு.தகலா |
| அ.சா.5 | விஜய் ஆன்ந்த் (சிறப்பு உதவி ஆய்வாளர்) |
| அ.சா.6 | திரு. ஜார்ஜ் ராஜா ( உதவி ஆய்வாளர் ஓய்வு) |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்**

| | |
|---|---|
| அ.சா.ஆ.1 | 16.06.2017ம் தேதியிட்ட புகார் மனுவில் உள்ள கையெழுத்து |
| அ.சா.ஆ.2 | 16.06.2017ம் தேதியிட்ட விபத்து நகலுடன் கூடிய காயச்சான்றிதழ் |
| அ.சா.ஆ.3 | 17.06.2017ம் தேதியிட்ட பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையெழுத்து |
| அ.சா.ஆ.4 | 17.06.2017தேதியிட்ட முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.5 | 17.06.2017ம்ம் தேதியிட்ட பார்வை மகசர் |
| அ.சா.ஆ.6 | 17.06.2017ம் தேதியிட்ட மாதிரி வரைபடம் |

**அரசு தரப்பு சான்றுபொருள்– *இல்லை.***

**எதிரிகள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள், சான்றுப் பொருட்கள்** – இல்லை

SUDHARSAN T

Digitally signed by SUDHARSAN T
Date: 2026.06.27 16:45:08 +0530

நீதித்துறை நடுவர்,
பட்டுக்கோட்டை.